# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 7 திங்கட்கிழமை (21.05.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 175


# நிலையான தீர்வுக்கு வலுச் சமநிலையான அணுகுமுறை அவசியம்



## விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தி குறைந்தளவு தீர்வைத் திணிக்க நினைப்பது மடமை என்கிறார் தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி,மே 21

**இனப்பிரச்சினைக்கு நீடித்து நிலைக்கத்தக்க தீர்வொன்றைக் காண்பதற்கான பேச்சுவார்த்தை வெற்றிகரமானதாக அமைய வேண்டுமானால் -**

**தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை அரசாங்கமும் சமவலு நிலையிலும் சம அந்தஸ்துடனும் இருக்க வேண்டியது மிகப் பிரதானமானதாகும்.**

**விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தி, குறைந்த பட்ச தீர்வு ஒன்றை திணிக்கலாம் என நினைப்பது பெரும் மடமையாகும்; அது ஏமாற்றத்தையே தரும்.**

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

'தமிழ் நெற்' இணையத் தளத்திற்கு அளித்த செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவரது செவ்வியின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

இனப் பிரச்சினைத் தீர்வுக்கு தமிழ் மக்களுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை எல்லாம், அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த சிங்கள அரசுகள் முறித்துக்கொண்டன.

அவற்றின் விளைவாகவும், இனவாதத் தூண்டுதலுடன் தமிழர்கள் இனப் படுகொலை செய்யப்பட்டதுமே தமிழர்கள் ஆயுதப் போராட்டத்தை நாடுவதற்கு வழி எடுத்துக் கொடுத்தன.

தமிழர்களின் தற்காப்புக்காகத் தொடங்கப்பட்ட ஆயுதப் போராட்டம், அவர்களை இராணுவ ரீதியாகத் தோற்கடித்து அவர்களைப் பேச்சு வார்த்தைக்கு கொண்டுவர முடியும் என்ற சிங்களவர்களின் நம்பிக்கையைச் சிதறடித்தது.

ஆகவே தமிழர்கள் பலமாக இருந்தால் மட்டுமே சிங்களத் தலைவர்கள் பேச்சு வார்த்தைக்கு வரும் சந்தர்ப்பம் உருவாகும் என்ற நிலை தோற்றுவிக்கப்பட்டது. ஆகப் பிந்தி நடைபெற்ற பேச்சுக்களும் அத்தகைய சூழ்நிலையிலேயே நடைபெற்றன.

இலங்கை அரசாங்கத்தின் பிந்திய தந்திரம் என்னவெனில், தமிழர்களை பலவீனமாக்கி, அவர்களுக்கு எதிரான இன அழிப்பை நடத்துவதற்கு சர்வதேச ஆதரவைப் பெறுவதாகும்.

(06 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் மோதல்

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாணம் - முகமாலையில் உள்ள படையினரின் முன்னரங்க காவலரணுக்குள் விடுதலைப்புலிகள் ஊடுருவித் தாக்குதல் மேற்கொண்டனர்.

இவ்வாறு தேசிய பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்திருக்கிறது.

நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலையடுத்து படையினரும் பதில் தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தின் பின்னர் குறித்த பகுதியில் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் விடுதலைப்புலி உறுப்பினர்களின் 3 சடலங்கள் மற்றும் ரி-56 ரகத் துப்பாக்கி என்பனவற்றை படையினர் மீட்டிருக்கின்றனர் என்று ஊடக மத்திய நிலையம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இந்தத் தாக்குதல் தொடர்பாக விடுதலைப்புலிகள் இதுவரை எந்தத் தகவலையும் வெளியிடவில்லை. (சி)

## சரத் பொன்சேகா முப்படைத் தளபதி?



சிறிலங்கா இராணுவத்தளபதி சரத் பொன்சேகா முப்படைத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தளபதியாக, இராணுவத்தலைமை அதிகாரியாக உள்ள லோரன்ஸ் பெர்னாண்டோ நியமிக்கப்படவுள்ளார்.

தற்போது முப்படைத் தலைமை அதிகாரியகவுள்ள டொனால்ட் பெரேரா வெளிநாடு ஒன்றின் தூதுவராக நியமிக்கப்படவுள்ளார்.

எதிர்வரும் சில வாரங்களில் இந்த மாற்றம் நடைமுறைப்படுத்தப்படும் எனக் கூறப்படுகிறது. (அ-1)

## பயங்கரவாதத்துக்கு எதிராக ஒரே குரலில் பேசுவோம்!

### ஜி-11 மாநாட்டில் ஜனாதிபதி உரை

அம்மான், மே 21

பயங்கரவாதத்திற்கு எதிராக ஜி11 நாடுகள் அனைத்தும் ஒரே குரலில் பேசவேண்டும். தீவிரவாதத்தை அடக்கும் விடயத்தில் நாடுகள் ஒன்றுக்கொன்று துணையாக இருக்கவேண்டும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜி11 நாடுகள் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஜோர்தான் சென்றுள்ள ஜனாதிபதி அங்கு உரையாற்றுகையிலேயே இந்த வேண்டுகோளை விடுத்தார்.

சில வளர்ந்த நாடுகள் பயங்கரவாதிகள் விடயத்தில் வேறுபாடு காட்டுகின்றன. பயங்கர (06 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தைச் சோதனை நிலையம் இன்று காலை திறக்கப்படும்

கிளிநொச்சி, மே 21

ஓமந்தைச் சோதனை நிலையம் இன்று திங்கட்கிழமை திறக்கப்பட உள்ளது. விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அதிகாரிகளுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இன்று முதல் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை சோதனை நிலையத்தைத் திறக்க முடிவாகியுள்ளது.

ஓமந்தைச் சோதனை நிலையம் பாதுகாப்புக் காரணங்களைக் கருதி கடந்த மூன்று நாள்களாக மூடப்பட்டிருந்தது தெரிந்ததே.

புளியங்குளத்தில் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.ஞானம் மற்றும் கிளிநொச்சி, வவுனியா செஞ்சிலுவைச் சர்வதேசக் (06 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா முன்னரங்க மோதல்களில்

## லெப். கேணல் அப்பன் உட்பட 7 விடுதலைப்புலிகள் உயிரிழப்பு

கிளிநொச்சி, மே 21

வவுனியா - பாலமோட்டைப் பகுதியில் சனிக்கிழமை காலை முதல் இடம்பெற்ற மோதல்களில் லெப்டினன்ட் கேணல் அப்பன் (குயிலன்) உட்பட ஏழு போராளிகள் உயிரிழந்துள்ளனர். - இவ்வாறு விடுதலைப்புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

இந்த மோதலில் அரச படையினரின் முன்னகர்வு முயற்சியை தாங்கள் முறியடித்துவிட்டனர் என்றும், சுமார் முப்பது முதல் நாற்பது வரையான அரசுப் படையினர் கொல்லப்பட்டும், பெரும் எண்ணிக்கையானோர் காயமடைந்தும் உள்ளனர் என்றும் விடுதலைப்புலிகள் மேலும் தெரிவித்திருக்கின்றனர். (06 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் புலிகளின் பீரங்கி நிலைகளை பின்தள்ள அரசுப் படைகள் தயாராகின்றன

கொழும்பு, மே 21

அரசுப்படைகள் விடுதலைப்புலிகளின் ஓமந்தையில் உள்ள முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளை முல்லைத்தீவை நோக்கிப் பின்தள்ளுவதற்கான படை நடவடிக்கைக்கு ஆயத்தமாகி வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் வன்னியில் புளியங்குளம், மாங்குளம் ஆகியபிரதேசங்களை நோக்கி முன்னேறுவதற்கும் படைகள் ஆயத்தமாகி வருகின்றன என்று கொழும்பு பாதுகாப்புச் செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

இது தொடர்பாக ஆங்கில வார ஏடு ஒன்றின் பாதுகாப்பு பத்தி எழுத்தாளர் வெளியிட்டிருக்கும் தகவல்கள் வருமாறு:-

மன்னார்ப் பகுதியிலுள்ள 450 வருடங்கள் பழைமையான மடு தேவாலயம் வடக்கு, தெற்கு என எல்லாப் பகுதிகளிலும் இருந்து பெருமளவான கத்தோலிக்க மதத்தவர்களைக் கவரும் பகுதியாகும்.

அமைதி முயற்சிகள் நடைபெற்ற காலப் பகுதியான 2002 - 2005ஆம் ஆண்டுகளில் பெருமளவான பக்தர்கள் தெற்கில் இருந்து அங்கு சென்று வந்துள்ளனர். அண்ணளவாக ஒவ்வொரு வருடமும் 5 லட்சம் பேர் சென்று வருவதுண்டு.

மோதல்கள் காரணமாக கடந்த ஆண்டு தெற்கில் இருந்து பக்தர்கள் எவரும் அங்கு செல்லவில்லை. கடந்த மாதம் இத்தாலிக்குச் சென்ற மஹிந்த, வத்திக்கான் செயலாளரிடம் மடுவுக்கு மக்கள் இலகுவாகச் சென்று வர அனுமதிக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தார்.

எனினும், சில மாதங்களுக்கு முன்னரே மடுப்பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. அங்கு மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கைகளினால் மடுவிலும் அதன் சுற்றாடலிலும் இருந்த மக்கள் வடக்கே பெரிய மடுவை நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர்.

எனவே மடுவையும் அதனை அண்டிய

(06 ஆம் பக்கம் பார்க்க)

## சு.க. யோசனையை ஆராய சர்வகட்சிக்குழு கூடுகிறது

கொழும்பு, மே 21

இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வு காண்பதற்காக ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி திருத்தங்களுடன் முன்வைக்கவுள்ள தீர்வு ஆலோசனை பற்றி விவாதிப்பதற்காக சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழு இந்தவாரம் கூடவுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் திருத்தப்பட்ட தீர்வு யோசனை இன்று அல்லது நாளை தம்மிடம் கையளிக்கப்படும் என்று சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தனது யோசனைகளை தீவிர எதிர்பார்ப்பின் மத்தியில் கடந்த மே தினத்தன்று வெளியிட்டிருந்தது.

தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்வதற்கு மிகப் பழைய - 1980ஆம் ஆண்டு காலத்துக்கு முந்திய - மாவட்டசபை அதிகாரப்பரவலாக்கலை ஒத்த அம்சங்களை அது கொண்டிருந்தால் அது பெரும் சர்ச்சையை கிளப்பிவிட்டது. தமிழர் தரப்புகள் அனைத்துமே பரிசீலனைக்கு கூட தகுதி அற்றவை என்று தெரிவித்து சு.கவின் அந்த யோசனைகளை நிராகரித்துவிட்டன.

எனினும் அது தமது கட்சியின் இறுதி யோசனை அல்ல என்று அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. திருத்தங்கள் செய்யப்பட்ட புதிய யோசனை சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அந்த இறுதி யோசனை திட்டமே இந்த வாரம் சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதனைப் பரிசீலிப்பதற்காகவே சர்வகட்சி பிரநிதிகள் இவ்வாரம் கூடவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீ.சு.கட்சியின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஆலோசனை வரைவு இன்று அல்லது நாளை தம்மிடம் ஒப்படைக்கப்

(06 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EXPOAIR எக்ஸ்போ ஏயார்

Your Friend in the skies...

## பதவி வெற்றிடம்

* அலுவலக உதவியாளர் (OFFICE BOY) - ஆண் (01)

⇨ நீங்கள்

★ யாழ்.மாநகர எல்லைக்குள் வசிப்பவராக
★ க.பொ.த. (சா/த) சித்தியடைந்தவராக (விரும்பத்தக்கது)
★20-30 வயதுக்கு இடைப்பட்டவராக
★ சுறுசுறுப்புடையவராகவும் அலுவலகம் சம்பந்தமான சகல தேவைகளுக்கும் ஏற்ப செயற்படக் கூடியவராகவும் இருப்பின் உங்கள் விண்ணப்பங்களை கீழ்க்குறிப்பிட்ட விலாசத்துக்கு 5 தினங்களுக்குள் அனுப்பி வைக்கவும்.

**முகாமையாளர்,**
எக்ஸ்போ ஏவியேசன் (பிறைவேட்) லிமிட்டெட்
இல.01, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## மாதகல் பிரதேசத்தில் மிதிவெடி அகற்றும் பணி

வலி. தென்மேற்கு, மே 21

மாதகல் பாணாவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின் மேற்கு பக்க வயல் காணிகளில் 'ஹலோ ட்ரஸ்ற்' நிறுவனம் மிதிவெடி அகற்றும் பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

இப்பிரதேசத்தில் 1992ஆம் ஆண்டு புதைக்கப்பட்ட பல மிதிவெடிகள் உள்ளதால் அதனை அகற்றித் தருமாறு மாதகல் விவசாயிகள் சம்மேளனம், மாதகல் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் என்பவை இணைந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஊடாகக் கோரிக்கை விடுத்திருந்தன. அதற்கமையவே மிதிவெடி அகற்றும் பணி தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

(அ-202-135)

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

21.05.2007 திங்கட்கிழமை




இராஜதீபன் (சித்தப்பா)

நாவற்குழி கிழக்கு, தச்சன்தோப்பைச் சேர்ந்தவர்களும் தற்போது லண்டனில் வசித்துவரும்
**ராஜ்குமார் - ஜெயபிரதா**
தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி
செல்வி **நிலக்ஷனா (நிலா)**
தனது முதாவது பிறந்த நாளை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் இன்று (21.05.2007) திங்கட்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.
இவரை இறவனின் நல்லாசியைப் பெற வாழ்த்துபவர்கள்: லண்டனிலுள்ள அப்பா, அம்மா, தீபன் சித்தா, லக்ஷியா அத்தை கொழும்பிலுள்ள அப்பப்பா, அப்பம்மா, அனுஷியா அத்தை, யாழ்ப்பாணத்தில் உள்ள அம்மப்பா, அம்மம்மா, மாமன்மார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் வேலம்பிராய் நாதன்பிரானின் அருளுடன் சகல செல்வங்களும் பெற்றுப்பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

(60745)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

882 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

சிங்கம் **06 09 21 55**

**18-05-2007**

செல்லுபடியாகும் தொடர் இல. 5904022 - 5918256

ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 309,985 | 10/- | 3,099,850/- |
| 2 இலக்கங்கள் | 28,412 | 20/- | 568,240/- |
| 1 இல. + லக்கினம் | 28,146 | 30/- | 844,380/- |
| 2 இல. + லக்கினம் | 2,658 | 100/- | 265,800/- |
| 3 இலக்கங்கள் | 753 | 500/- | 376,500/- |
| 3 இல. + லக்கினம் | 70 | 5,000/- | 350,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| மொத்தம் | | | 5,904,770/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 370,033 | | 6,928,270/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,692,400/-

தொடர் இல.4048309 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2007 மே மாதம் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 5918220-2-07 |
| நுவரெலியா | 5905452-1-31 |
| ஹம்பாந்தோட்டை | 5905134-3-06 |
| மொனராகலை | 5907024-1-54 |
| கம்பஹா | 5916177-9-72 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


தில்லையம்பதியாள் துணை

# சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி

## அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

சர்வசித்து வருச முப்பத்திரண்டாவது ஆண்டு

## வைகாசி மஹோற்சவப் பெருவிழா - 2007



| | |
|---|---|
| 22.05.2007 | செவ்வாய் முற்பகல 10.00மணிக்கு கொடியேற்றம் |
| 26.05.2007 | சனி பிற்பகல் 5.00மணிக்கு பூச்சப்பறம் |
| 27.05.2007 | ஞாயிறு பிற்பகல் 5.00மணிக்கு வசந்த உற்சவம் |
| 29.05.2007 | செவ்வாய் பிற்பகல 1.00மணிக்கு வேட்டை,(ஸ்ரீ ஞானவைரவர் ஆலய முன்றலில்) பிற்பகல 5.00மணிக்கு சப்பறம். |
| 30.05.2007 | புதன் முற்பகல 10.00மணிக்கு தேர், மதியம் அன்னதானம். |
| 31.05.2007 | வியாழன் முற்பகல் 10.00மணிக்கு பூரணைத் தீர்த்த உற்சவம் பிற்பகல் 4.00மணிக்கு கொடியிறக்கம், சண்டேஸ்வரி உற்சவம் |
| 01.06.2007 | வெள்ளி நண்பகல் அன்னதானம், பிற்பகல் 5.00மணிக்குபூங்காவனம் |
| 02.06.2007 | சனி காலை 6.00மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம், பிற்பகல் 5.00மணிக்கு வைரவர்மடை. |

**மஹோற்சவ பிரதமகுரு :**
**சிவப்பிரமஸ்ரீ இரங்க வரதராஜக்குருக்கள் (கோண்டாவில்)**
**ஆலய நித்திய பூசகர்**
**வ.கோபாலகிருஸ்ண குருக்கள்(தில்லையம்பதி)**
**மங்கள இசை: நா.பிரசாத் குழுவினர்( சாவகச்சேரி)**

தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே சரணம்

தில்லையம்பதி திருக்கோயில் பரிபாலனசபை


## கொழும்பு - யாழ் - கொழும்பு விமான சேவை

கொழும்பு - யாழ் விமானப் பயணிகளின் நலன் கருதிப் புதிய பயணிகள் விமான சேவை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.
பொதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும். முன்கூட்டியே உங்கள் ஆசனங்களைப் பதிவுசெய்து கொள்ளவும்.
மேலதிக விவரங்களுக்கு:
EURO GROUP
077 3846998
(சி/52441) 011 4542190

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் கிழக்கு, செல்லப்பா வீதியில் உள்ள 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
மேற்குறிப்பிட்ட முகவரியில் தொடர்புகொள்ளவும்.
(60773) **077 9688487.**


# மரண அறிவித்தல்



## கந்தையா மதுரரெத்தினம்

மண்டைதீவு தெற்கை பிறப்பிடமாகவும் 16/5, விதானையார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மதுரரெத்தினம் நேற்று (20.05.2007) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் மல்லிகாதேவியின் அன்புக் கணவரும் தசாயினி, யதுர்சிகா, தனுசியா ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகராசா, ராசலட்சுமி, விக்கிரமசிங்கன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தர்மகுலேந்திரன், சண்முகதாஸ் (பனை அபிவிருத்தி சபை), ஜானகி (கனடா), கருணாகரன் (கனடா), தியாகராசா (வட்டக்கச்சி), சீதா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.05.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் துண்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*16/5, விதானையார் வீதி,*
*ஈச்சமோட்டை.*
(60778)
தகவல்:
சண்முகதாஸ் (மைத்துனர்).

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

வையத்துள் 09 - 02 - 1952
வானுலகுள் 04 - 06 - 2003



அமரர்

## கோணேசபிள்ளை சிவபாதசுந்தரம்

(ஓய்வுபெற்ற அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர், சோலைவரிப் பகுதி - யாழ்.மாநகர சபை)

திதி: வைகாசித் திங்கள் பூர்வபக்க பஞ்சமி
(21.05.2007)

நாரந்தனை கந்தன் தந்த கண்மணியனே - ஐயா நீர்
பரமனவன் பதமடைந்து ஆண்டுகள் நான்கு ஓடி விட்டன
-உங்கள்
அருளுருவம் எம்மெல்லோர் மனதிலும் என்றென்றும் -
கருவறை தெய்வம் வாழுமே!

(60767)

118/4,பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
**குடும்பத்தினர்.**

# ஏழாம் ஆண்டு நினைவில்...





திதி: 2007 ★ 05 ★ 21

அமரர் சின்னத்துரை கனகசபை
(ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி)
ஏழாண்டு கடந்தும் என்றும் தணியாத
தாகமாகத்தவிக்கின்றோம் இன்றும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

திருமதி சிதம்பரபிள்ளை விசாலாட்சி
அம்மாவாகி வாழ்ந்தீர் - எம்
வாழ்க்கையின் அகல் விளக்கு
நீங்கள்
அ. பரமேஸ்வரன் (பேரன் குடும்பத்தினர்).

(60779) "ஈஸ்வரி இல்லம்", மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி


## முறைசாரா கல்வி

யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் முறைசாராக் கல்வி வகுப்புகளில் தலை அலங்காரம், ஐசிங் என்பவற்றுடன் வீட்டு மின்சுற்று வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆர்வமுள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
ப.சண்முகநாதர்
அதிபர்.
(60772)


# மரண அறிவித்தல்

## மார்க்கண்டு குமாரதாசன்

தாவடியைப் பிறப்பிடமாகவும் துணைவி, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு குமாரதாசன் நேற்று (20.05. 2007) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - அன்னபூரணி தம்பதிகளின் அன்பு மகனும் செல்வத்தின் (இளைப்பாறிய அசிரியை, யா/நவாலி மகாவித்தியாலயம்) அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2007) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நவாலி வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*துணைவி,*
*வட்டுக்கோட்டை.*
(60775)
*தகவல்:*
**செல்வம்** *(மனைவி).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடுதல் விலைக்கு சிமெந்து விற்பனை: பற்றுச்சீட்டும் வழங்கப்படுவதில்லை

## நுகர்வோர் முறையிடுகின்றனர்

கரவெட்டி, மே21

குடாநாட்டில் சிமெந்து அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றது என பாவனையாளர் விசனம் தெரிவிக்கின்றனர். சில விற்பனை நிலையங்களில் பற்றுச் சீட்டும் வழங்கப்படுவதில்லை எனவும் முறையிடுகின்றனர்.

கடந்த 4 ஆம் திகதி முதல் சிமெந்து பக்கெற் ஒன்றின் விலை ஆயிரத்து 200 ரூபா என யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் விலை நிர்ணயம் செய்திருந்தார். கூடுதல் விலைக்கு விற்பனை செய்வோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவுறுத்தியிருந் தார்.

எனினும் சில தனியார் வர்த்தக நிலையங்களில் ஒரு பைக்கற் சிமெந்து ஆயிரத்து 500 ரூபா முதல் ஆயிரத்து 700 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது என நுகர்வோர் முறையிடுகின்றனர். (202-70)

# குடாநாட்டில் 'ஸ்ரெச்சின்' மருந்து இல்லை: கட்டாக்காலி நாய்களை அழிப்பதில் சிரமம்

யாழ்ப்பாணம், மே 21

சுகாதார அமைச்சு குடாநாட்டுக்கு நீண்டகாலமாக 'ஸ்ரெச்சின்' நஞ்சு மருந்து அனுப்பிவைக்கவில்லை. இதனால் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிப்பது சிரமமாக உள்ளது என முன்னாள் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் க.தா. சிவபாதம் தெரிவித்தார்.

எனவே பயிற்றப்பட்ட தொழிலாளர்களைக் கொண்டு கட்டாக்காலி நாய்களை நீரில் அமிழ்த்திக் கொல்வதற்கு உள்ளூராட்சி சபைகள் முன்வர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற சுகாதார அபிவிருத்திக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:

யாழ்.மாவட்டத்தில் ஒரேயொரு பிரதேச சபை மட்டுமே கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு நீர்த்தொட்டியை அமைத்துள்ளது. ஏனைய பிரதேச சபைகளும் தொட்டிகளை அமைக்க முன்வரவேண்டும் என்றார்.

இதேவேளை-

பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களின் விவரங்களை பொதுச்சுகாதார பரிசோதகர்களும் பொதுச்சுகாதார மாதுக்களும் இணைந்து திரட்டி நன்னடத்தை அதிகாரியிடம் வழங்கவேண்டும் என்றும்

16 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகம் தொடர்பாகவும் தகவல்கள் திரட்டப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் அறிவுறுத்தினார். (202-95)

# சதாவதானியின் நூற்றாண்டு மலருக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

வடமராட்சி,மே 21

மேலைப்புலோலி சதாவதானி நா.கதிரவேற்பிள்ளையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நூற்றாண்டு விழா நூல் ஒன்று வெளியிட்டுவைக்கப்படவுள்ளது. இதற்கான ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு நூல் வெளியீட்டுச் சபை கேட்டுள்ளது.

நூலாசிரியர்களாக பேராசிரியர் நா.ஞானகுமரன், கலாநிதிமனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் பணியாற்றுவர்.

இவர்களுக்கு உடன் ஆலோசனைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நூலுக்கு அவர் தொடர்பான ஆக்கங்கள், ஆய்வுக்கட்டுரைகளை 'சதாவதானி கதிரவேற்பிள்ளை நூற்றாண்டு நூல் வெளியீட்டுச்சபை, கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம், மேலைப்புலோலி, பருத்தித்துறை' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(203-160)

# அதிபர், ஆசிரியர் சேவையிலுள்ளவர்களுக்கு புதிய சம்பளம்; கல்வி அமைச்சு சிபாரிசு

அச்சுவேலி, மே 21

இலங்கை ஆசிரியர் சேவை, அதிபர் சேவையில் பணிபுரிபவர்களுக்கான புதிய உத்தேச சம்பளத் திட்டத்தை கல்வி அமைச்சு, சம்பள பதவி அணி ஆணைக்குழுவிற்கு சிபாரிசு செய்துள்ளது.

ஆசிரியர்,அதிபர்களுக்கு ஏற்புடைய சம்பளம் வழங்கப்பட்டவில்லை என ஆசிரியர் தொழிற்சங்கங்கள் முறைப்பாடு செய்ததுடன் சம்பளங்கள் அதிகரிப்பட வேண் டும் எனவும் கோரிக்கை விடுத்தன.

கோரிக்கையை ஏற்றுக் கொண்ட கல்வி அமைச்சு கடந்த 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை கல்வி அமைச்சருடன் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் நடத்திய சந்திப்பில் இடைக்கால அறிக்கையை சங்கப் பிரதிநிதிகளிடம் கையளித்தது.

| இலங்கை ஆசிரியர் சேவை உத்தேச சம்பளம் (ஆரம்பச் சம்பளம்) | | |
|---|---|---|
| ஆசிரியர் சேவைத்தரம் | தற்போது வழங்கப்படும் சம்பளம் | கல்வி அமைச்சு சிபாரிசு செய்துள்ளது |
| 3: II | 12, 920/= | 14,870/= |
| 3: I | 13,790/= | 17,110/= |
| 2:II | 15,350/= | 20,160/= |
| 2:I | 17,900/= | 22,935/= |
| I | 21,345/= | 25,515/= |
| **இலங்கை அதிபர் சேவை உத்தேச சம்பளம் (ஆரம்பச் சம்பளம்)** | | |
| 3 | 15,350/= | 18,490/= |
| 2:II | 17,900/= | 21,980/= |
| 2:I | 21,345/= | 25,575/= |
| I | 21,990/= | 28,095/= |

# வலி. வடக்கில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், மே 21

யாழ். மாவட்ட பதிவாளர் அலுவலகத்தினரால் வலி. வடக்கு பிரதேசத்திற்கான நடமாடும் சேவை ஒன்று நடத்தப்பட உள்ளது.

வலி. வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் இதுவரை தமது பிள்ளைகளின் பிறப்புகளைப் பதிவு செய்யாதவர்கள் மற்றும் இறப்பு, திருமண பதிவுகளை மேற்கொள்ளாதவர்களை கிராம அலுவலர்களுடன் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் தொடர்பு கொண்டு ஆவணங்களை பூர்த்தி செய்து வழங்குமாறு வலி. வடக்கு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (203)

# அவசரமாக அம்புலன்ஸ் தேவைப்படும் நோயாளர்களுக்கு சில அறிவுரைகள்

யாழ்ப்பாணம், மே 21

ஊரடங்கு அமுலில் இருக்கும் நேரத்தில் அம்புலன்ஸ் வசதி அவசியம் தேவைப்படும்-போக்குவரத்திற்குச் சிரமமான உட்பகுதியில் வசிப்பவர்கள் அருகிலுள்ள பிரதான வீதிக்கு விளக்குடன் வந்தால் இலகுவாக அடையாளம் கண்டு நோயா ளரை ஏற்றிச் செல்ல முடியும்.

இவ்வாறு யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவுறுத்தியுள்ளார்.

இரவு நேரங்களில் - ஊரடங்கு அமுலில் இருக்கும் வேளையில் அவசர நோயாளர்களை ஏற்றிச் செல்வதற்கென சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையும் அம்புலன்ஸ் சேவையை நடத்தி வருகின்றன.

இச்சேவையைப் பயன்படுத்துவது குறித்து பணிப்பாளர் விடுத்துள்ள அறிவுறுத்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

✱ இச்சேவையை உண்மையாக மிக அவசரமாக மருத்துவ உதவி தேவைப்படும் நோயாளர்கள் மட்டும் பயன்படுத்துங்கள்.

✱ பிரசவத்தை எதிர்நோக்கும் கர்ப்பவதிகள், குறிப்பாக பிரயாண வசதி குறைவான பகுதிகளில் வசிக்கும் கர்ப்பவதிகள் அண்மையிலுள்ள மகப்பேற்று நிலையங்களில் ஒரு வாரத்திற்கு முன்பே இரவு நேரங்களில் தங்கி நிற்கலாம்.

✱ நோயாளர்களிடமிருந்து தொலைபேசி அழைப்பு கிடைத்த பின்பு படைத்தரப்பின் அனுமதியைப் பெற்றே அம்புலன்ஸ் வண்டியை அனுப்ப வேண்டும். எனவே பொது மக்கள் கால தாமதத்தை உணர்ந்து செயற்படவேண்டும்.

✱ இச்சேவையை நடத்துவதில் பல சிரமங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. எனவே பொதுமக்கள் எமது நிலையைக் கருத்தில் கொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(202)

# சனசமூக நிலையங்களுக்கு வலி.கிழக்கில் நன்கொடை

வலி.கிழக்கு பிரதேச சபை எல்லைக் குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு நன்கொடைகள் வழங்கப்படவுள்ளன.

எனவே சனசமூக நிலைய கூட்டறிக்கைகள், வங்கிப் புத்தகம் ஆகியவற்றுடன் பிரதேச சபை உப அலுவலகத்துக்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் சமுகமளிக்கு மாறு பிரதேச சபைச் செயலர் கேட் டுள்ளார். (203)

# மூத்த படைப்பாளர் வரதருக்கு எழுத்தாளர், பிரமுகர்கள் அஞ்சலி

## மலர் வெளியீடும் நினைவுரைகளும் இடம்பெற்றன

யாழ்ப்பாணம்,மே21

மூத்த படைப்பாளியும் மூதறிஞருமான வரதரின் அஞ்சலி நினைவுகூர் நிகழ்வு நேற்று நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.இலக்கிய வட்டம் மற்றும் வரதரின் குடும்பத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு எழுத்தாளர் கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்) தலைமை வகித்தார்.பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ் நினைவுரை நிகழ்த்தினார்.

நிகழ்வில் வரதரின் நிறைவு கால நூல்களான யாழ்ப்பாண தேசம், கிரண்பேடி மனிதர்களின் தேவைகள், பூதத்தம்பி ஆகிய நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன. நூல்களின் வெளியீட்டுரைகளை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் எஸ்.சண்முகதாஸ், பேராசிரியர் சிவலிங்கராசா ஆகியோர் நிகழ்த்தினர்.

அஞ்சலி உரைகளை பேராசிரியர் எஸ். சண்முகதாஸ், பண்டிதர் க.சச்சிதானந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.

வரதரின் நினைவு மலரை திருமதி அ. வரதர் வெளியிட்டு வைக்க பண்டிதர் எஸ். சச்சிதானந்தன் பெற்றுக் கொண்டார்.

(1-202-11-68)

# இலங்கையர்களுக்கு ஆஸ்திரேலியா அரசு வழங்கும் புலமைப் பரிசில்கள்

ஆஸ்திரேலியாவில் அடுத்த ஆண்டில் கலைமாமணி மற்றும் கலாநிதிப் பட்டங்களைப் பெறுவதற்கான உயர்கல்விப் புலமைப் பரிசில்களைப் பெறுவதற்கு தகுதியுடைய இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து அந்நாட்டு அரசு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

'ஆஸ்திரேலியாவின் மேம்பாட்டுப் புலமைப் பரிசில்கள்' என்னும் உயர்கல்வி நெறிக்கு இலங்கை அரச ஊழியர்களிடம் மட்டும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 45 வயதுக்குட்பட்ட பட்டதாரிகள், பட்டப்பின் படிப்பாளர் தகுதி பெற்ற, 2ஆண்டுகள் தொழில் அனுபவம் பெற்றவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது அமைச்சின் ஊடாக ஜூலை 9ஆம் திகதிக்கு முன்னர் **Department of External Resources, Ministry of Finance and Planning** என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் தலைமைத்துவ விருதுக்கு அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ஆஸ்திரேலிய பல்கலைக் கழகமொன்றினால் நிபந்தனையற்ற முறையில் ஏற்றுக் கொள்ள இனங்காணப்படுபவர்கள் மட்டுமே இவ்விருதுக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரி சிறப்புமிக்க பட்டதாரி மாணவர்களாகவும் பட்டப்பின் படிப்பில் கல்வித்துறை சாதனையாளர்களாகவும் இருந்திருப்பதுடன் ஆங்கில மொழியில் உயர்மட்டத் திறமை பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை <**www.australianscholarships.gov.au**> என்னும் இணையத் தளத்தில் எதிர்வரும் ஜூலை 31ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது **Scholarships Officer, Australian High Commission, 21, Gregory's Rd, Colombo-7, Srilanka** என்ற முகவரிக்கு எதிர்வரும் ஜூலை 16ஆம் திகதிக்கு முன்னர் தபாலிலோ அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(202)




மூதறிஞர் வரதரின் நினைவு கூர் நிகழ்வு நேற்று நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வு மேடையில் அமரர் வரதரின் திருவுருவப்படம் வைக்கப்பட்டிருப்பதையும் பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை முதலாவது படத்தில் காணலாம். கலாநிதி க.குணராசா தலைமை உரை நிகழ்த்துவதையும், நினைவு மலரின் முதற் பிரதியை திருமதி அ.வரதரிடம் இருந்து பண்டிதர் க.சச்சிதானந்தன் பெற்றுக்கொள்வதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள்: நேசன், லக்ஷ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற 19 வயதின் கீழ் பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்ற பாடசாலை அணியினர், அதிபர், உப அதிபர், விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்கள், பயிற்றுநர் ஆகியோருடன் காணப்படுகின்றனர்.

மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப்பெற்ற மல்லாகம் மகாவித்தியாலய அணியை வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/மல்லாகம் மகா வித்தியாலயம்.


டொலரில் வருமானம்?
மின் வணிகம் (E-commerce)

ஒவ்வொரு ஞாயிறு மற்றும் பொதுவிடுமுறை தினங்களில் எமது நிறுவனத்தில் செயன்முறையுடன் கூடிய கணினிசார் கருத்தரங்கம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது

அமர்வு 1 -நேரம்: காலை 8.30-10.30 வரை
அமர்வு 2 -நேரம்: மாலை 2.30-4.30 வரை
கட்டணம் ரூ.200 மட்டும்

பங்கு பற்ற விரும்புபவர்கள் முன்கூட்டியே பதிவுசெய்யவேண்டும்.ஒரு அமர்வில் 15 பேர் மாத்திரமே அனுமதிக்கப்படுவர்

Speed IT net
72/28 பணிக்கர் லேன்,பலாலி வீதி உட்புறம் திருநெல்வேலி.
Tel:4591871 Web: www.speeditnet.com


## மாவை கொல்லங்கலட்டி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வசந்த மஹோற்சவ பெருவிழாத் திருமுகம்

சுவஸ்திஸ்ரீ நிகழும் சர்வசித்து வருடம் வைகாசி மாதம் 8ஆம் நாள் (22.05.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு மகத்துவஜாரோகணமாகி காலை, மாலை 10 தினங்கள் மஹோற்சவம் நிகழும்.

வைகாசி 16 (30.05.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்று பிற்பகல் 2 மணிக்கு கொடி இறக்கத் திருவிழாவும் வைகாசி 18 (01.06.2007) வெள்ளிக்கிழமை பிராயச்சித்தாபிசேகம் ஸ்ரீ வைரவர் மடை என்பனவும் இடம்பெறவுள்ளன.

காலை, மாலை திருவிழாவுக்கு பஸ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
தினமும் அன்னதானம் நடைபெறும்.

(60765) அறங்காவலர்.



காரைநகர் களபூமி பாலாவோடை குறிஞ்சாக்குழி ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் சர்வசித்து வருஷ பிரமோற்சவ விஞ்ஞாபனம்

**அம்பிகை அடியார்களே!**

வைகாசி 8 ஆம் நாள் 22.05.2007 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு **கொடியேற்றம்.**
வைகாசி 14 ஆம் நாள் 28.05.2007 திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு **வேட்டைத் திருவிழா.**
வைகாசி 15 ஆம் நாள் 29.05.2007 செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு **சப்பரத்திருவிழா.**
வைகாசி 16 ஆம் நாள் 30.05.2007 புதன்கிழமை காலை7 மணிக்கு வசந்தமண்டப் பூசை. காலை9 மணிக்குத் **தேர்த்திருவிழா.**
வைகாசி 17 ஆம் நாள் 31.05.2007 வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு **தீர்த்தோற்சவம்.**
வைகாசி 18 ஆம் நாள் 01.06.2007 வெள்ளிக்கிழமை **பூங்காவன உற்சவம்.**
வைகாசி 22 ஆம் நாள் 05.06.2007 செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு **வேள்வியும் வைரவர் பொங்கலும்.**

மஹோற்சவ குரு
பிரம்மஸ்ரீ கு.சண்முகராஜக் குருக்கள்
( ஆலய பிரதம குரு).

(60766) நிர்வாகம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் நடன ஆசிரியை திருமதி **அனுஷா சுரேஸ்** அவர்களின் அன்புக்கும், பாசத்திற்குமுரிய தந்தை

**இரத்தினசிங்கம் ஜெகசோதி**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம். அன்னாரின் ஆத்மா சாந்திபெற வேண்டிப் பிரார்த்திப்பதுடன் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.


வசீகர தோற்றத்திற்கு
சந்தனாலேப
(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)




யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.Phone: 222 2567
சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REGNO A/L 250


## அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம் (வ-து)
## பதவி வெற்றிடங்கள்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு தகுதியானோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை காரியாலயத்தில் 10/= செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் பொது முகாமையாளர், அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம், அளவெட்டி எனும் முகவரிக்கு 04.06.2007ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**பதவிகள்:**

1.வொறிச்சாரதி (இல.312/13)
சம்பளத்திட்டம் (31/99இன் படி)
4,000 - 5,550
75x10 - 80x10
கல்வித் தகைமை :- 5ஆம் வகுப்புச் சித்தி அத்துடன் கனரக வாகன ஓட்டுநர்களுக்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். வாகனம் செலுத்துவதில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.
வயது: 18-45 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

2. காவலாளி (இலக்கம் 315/17)
சம்பளத் திட்டம் (31/99இன் படி)
3,000 - 4,150
55x10 - 60x10
கல்வித் தகைமை:- 5ஆம் வகுப்புச் சித்தியுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும். மேற்படி பதவியில் ஒரு வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.
வயது: 18-45 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு:
1. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2.சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது.
3.சங்கம் கோரும் பிணைப்பணத்தைச் செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

(கி/52447)

பொதுமுகாமையாளர்,
அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்,
அளவெட்டி.

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 30 * 01 * 1931 | 25 * 05 * 2004 |

திருமதி-
# ஆறுமுகம் கனகம்மா

(இளைப்பாறிய ஆசிரியர் - யா/கமலாம்பிகை வித்தியாசாலை, மீசாலை)

திதி: சஷ்டி

**அன்பின் உறைவிடமே**
**மூன்று ஆண்டுகள் ஆனதம்மா**
**எண்ணித்தினமும் ஏங்குகின்றோம்**
**உங்கள் நினைவு ஓயவில்லை**
**உங்கள் வதனமுகமும் நினைவுகளும்**
**எம்மை விட்டு என்றுமே நீங்காதம்மா.**

"ஜெயபதி"
தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.

(60716) குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
### இராமலிங்கம் இராசசுந்தரம்

(ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர், முன்னாள் பொதுமுகாமையாளர்-பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்)

பிறப்பு: 25-09-1950 இறப்பு: 22-04-2007

கடந்த 22.04.2007 அன்று இறைபதம் அடைந்த எம் குடும்பத்தலைவர் சுகவீனமுற்றவேளை இல்லத்திலும் வைத்தி யசாலை அவசர, தீவிர சிகிச்சைப்பிரிவுகளிலும் மருத்துவ உதவிகள் வழங்கிய வைத்திய சமூகத்தினருக்கும் வைத்தியசாலையிலும் இறுதிநிகழ்விலும் தோள் கொடுத்த யாழ். போதனா வைத்தியசாலை இரத்தவங்கி சமூகத்தினருக்கும் இறுதிவரை உற்றதுணையாக இருந்த உறவினர்கள், அயலவர்கள், வளர்மதி ச.ச.நிலைய நண்பர்கள், மருத்துவபீட மாணவர்கள், பத்திரிகை மூலமும் பிரசுரங்கள் மூலமும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்கள், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலித்தவர்கள், தொலைபேசி, தொலைநகல், தந்திகள், கடிதங்கள் மற்றும் இரங்கல் மடல்கள் மூலமாகத் துயர் பகிந்தவர்கள், மற்றும் இறுதி நிகழ்வில் அஞ்சலி உரைகளை ஒழுங்கமைத்தவர்கள், அஞ்சலி உரைகளை நிகழ்த்தியவர்கள், கூட்டுறவு ஆணையாளர்கள், பரிசோதகர்கள், உத்தியோகத்தர்கள், கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், பணிப்பாளர் சபையினர், பொது முகாமையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் குறிப்பாக மாதகல் வாழ் மக்களுக்கும் பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கச் சமூகத்தினருக்கும் மற்றும் பெயர் குறிப்பிடத் தவறிய ஏனையோருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் நாளை (22.05.2007) செவ்வாய்க்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

34, [illegible] ஒழுங்கை, கொக்குவில்.
தொ.பே.:0777 678763

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அதிகரிக்கும் பாதுகாப்புச் செலவு

இலங்கை இனப்பிரச்சினைக்கு யுத்த வழியில் - இராணுவ ரீதியில் - தீர்வு காண்பதில் முனைப்பாக நிற்கும் மஹிந்த ராஜபக்ஷ அரசு, அதனால் போர்த் தீவிரப் போக்கில் வெறிகொண்டு செயற்படுகின்றது.

ஏற்கனவே நொந்து நொடிந்துப் போயிருக்கும் நாட்டின் பொருளாதாரத்தை, இந்த அரசின் போர்முனைப்புப் போக்கால் உருவாக்கப்பட்டிருக்கும் யுத்தச் செலவினம் மேலும் மிக மோசமாகச் சீரழித்திருக்கின்றது.

நான்காவது ஈழ யுத்தத்தில் விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து புதிய, புதிய சவால்களை எதிர்கொள்ளும் மஹிந்தரின் அரசு அவற்றைச் சமாளிப்பதற்காக புதிய, புதிய ஆயுதங்கள், யுத்தத் தளபாடங்கள், போரியல் கருவிகள் என வாங்கிக் குவிக்கின்றது. அதற்காகப் பணத்தைக் கொட்டிக் கொடுத்து, வாரிச் செலவழித்து, ஏற்கனவே வெறுமையாகிப் போய்க் கிடக்கும் நாட்டின் கஜானாவை மேலும் துடைத்துக் காலிசெய்கின்றது.

இப்போது விடுதலைப் புலிகளின் வான் புலிகள் படையின் அறிமுகத்தோடு புதிய திருப்பம் ஏற்பட்டிருக்கின்றது. கள முனையில் புதிய நெருக்கடியை அரசுப் படைகள் சந்தித்து நிற்கின்றன. இந்தச் சவாலை எதிர்கொள்வதற்காக மேலும் பெருந்தொகைப் பணத்தைச் செலவிடவேண்டிய - தவிர்க்க முடியாத - இக்கட்டை எதிர்கொண்டிருக்கின்றது மஹிந்தரின் அரசு.

ஏற்கனவே யுத்தச் செலவினத்தால் தள்ளாடும் இலங்கையின் பொருளாதார நிலைமை, வான் புலிகளால் ஏற்பட்டுள்ள சவாலை முறியடிப்பதற்கான ஆயுத, தளபாட மற்றும் போர் விமானங்களை வாங்கிக் குவிப்பதற்கு இடமளிக்க மாட்டாது என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

ஆனால் எக்கேடு கெட்டாலும் - எப்பாடு பட்டாலும் - ஆயுதங்களை வாங்கிக் குவித்து, அவற்றின் மூலம் புலிகளின் பலத்தை அடித்து, நொறுக்கி, முறிக்காமல் விடமாட்டோம் என்று சூளுரைத்துச் செயற்படுகின்றது மஹிந்தரின் அரசு.

கடந்த வருட இறுதியில்தான் ஒவ்வொன்றும் சுமார் 26 கோடி 60 லட்சம் ரூபா பெறுமதியான நான்கு 'மிக் 27' ரக விமானங்களை மொத்தம் 106 கோடி ரூபாவுக்கு இலங்கை கொள்வனவு செய்திருந்தது.

ஆனால் அதன் பின்னர் இப்போது புதிதாகப் புலிகளின் வான்படை அச்சுறுத்தல் புற்றீசல் போல் கிளம்பியிருக்கின்றது.

இதுவரை இலங்கை அரசு சுவீகரித்த விமானங்கள், வானத்தில் பறந்தபடி நிலத்தில் அல்லது கடலில் அசையும் அல்லது நிலைத்திருக்கும் ஓர் இலக்கைத் தாக்கும் வசதியையே கொண்டிருந்தன. வானில் பறக்கும் ஒரு விமானத்தை வானில் கலைத்துச் சென்று தாக்கும் தகைமையை அந்த விமானங்கள் பெற்றிருக்கவில்லை. வான் வழித் தாக்குதல் ஆபத்தை இதற்கு முன்னர் இலங்கைப் படைகள் புலிகளிடமிருந்து எதிர்கொள்ளாததால் அத்தகைய தாக்குதல் தகைமையைப் பெற்றுக்கொள்வது குறித்து இலங்கை சிரத்தை காட்டவேயில்லை. இதனால் கடந்த ஆண்டு இறுதியில் ரஷ்யத் தயாரிப்பான 'மிக் 27' தாக்குதல் விமானங்கள் நான்கை சுமார் 106 கோடி ரூபா செலவில் கொள்வனவு செய்த போது வானிலிருந்து வானுக்குத் தாவும் பலத்தைப் பெற்றுக்கொள்வது குறித்து இலங்கை அரசின் பாதுகாப்புத் தரப்பு கவனிக்கவில்லை; சிந்திக்கவில்லை.

ஆனால் இப்போது தென்னிலங்கை மீது அடுத்தடுத்து மூன்று விமானத்தாக்குதல்களை எந்தத் தடையுமேயின்றி வெற்றிகரமாக மேற்கொண்டு புலிகள் இயக்கம் நிரூபித்திருப்பதால், புலிகளின் விமானங்களை வானில் வைத்தே வழிமறித்துத் தாக்கி அழிக்கும் வலுவை எப்படியேனும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இலங்கைப் பாதுகாப்புத் தரப்புக்கு இப்போது நேர்ந்திருக்கின்றது.

எனவே, ஏற்கனவே தன் வசம் இருக்கும் எட்டுக்கு மேற்பட்ட 'மிக் 27' தாக்குதல் விமானங்களுக்கு மேலதிகமாக, புலிகளின் விமானங்களை வானில் வைத்து வழிமறித்துத் தாக்கி அழிக்கக்கூடிய வலிமை கொண்ட 'மிக் - 29' ரக விமானங்களையும் வாங்க வேண்டிய கட்டாயம் இலங்கைக்கு ஏற்பட்டிருக்கின்றது.

ஒரு சாதாரண 'மிக் 29' ரக விமானம் சராசரி 167 கோடி ரூபா வரை பெறுமதியுடையது. தவிரவும், இந்த 'மிக் 29' ரக விமானங்களை விமானப்படையில் இணைத்துக் கொள்வதாயின் அதற்கு முன்னோடியாக 'மிக் 29'ரகப்பயிற்சி விமானம் ஒன்றைக் கட்டாயம் கொள்வனவு செய்வது அவசியமாகும். மேலும் இந்த விமானங்களுக்குத் தேவையான உதிரிப்பாக ஒப்பந்தம் ஒன்றையும் அந்த விமானங்களை விநியோகிக்கும் வெளிநாட்டு நிறுவனத்துடன் இலங்கை செய்து கொள்ள வேண்டியிருக்கும்.

மேலும் அந்த விமானத்துக்குத் தேவையான ஏவுகணைகள், ரி.வி. மற்றும் வெப்பவீச்சு வழிகாட்டலைத் தொடர்ந்து சென்று தாக்கும் கணைகள் போன்றவற்றைப் பொருத்த வேண்டியிருக்கும்.

அத்தோடு, இப்போது வான் புலிகளால் ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல் சவாலைச் சமாளிப்பதற்காக ஆள் இல்லா உளவு விமானங்கள், அவற்றை இயக்குவதற்கான கருவிகள், புதிய ஹெ லிக்கொப்டர்கள், தற்போதுள்ள ஹெலிக்கொப்டர்களைத் தரமுயர்த்தல், அவற்றைப் பழுது பார்த்துச் சீர் செய்தல் என்று பல விடயங்களை இலங்கை விமானப் படை அவசரமாகவும் அவசியமாகவும் செய்யவேண்டியிருக்கின்றது.

இவற்றுக்கும், கடந்த வருட இறுதியில் பெற்ற 'மிக் 27' ரக விமானங்களுக்குமாகச் சேர்த்து மேலும் ஆயிரத்து எழுநூறுகோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையை அரசு இப்போது செலவிடவேண்டி நேர்ந்திருக்கின்றது என்பதைப் பிரபல இராணுவ ஆய்வாளர்கள் புட்டுக்காட்டியிருக்கின்றனர்.

ஏற்கனவே கடந்த ஆண்டைவிட இவ்வாண்டுக்கான பாதுகாப்புச் செலவினம் 45 வீதம் அதிகரித்து, 14 ஆயிரம் கோடி ரூபாவைத் தாண்டியுள்ளது.

இப்போது அந்தச் செலவினம் மேலும் பல ஆயிரம் கோடி ரூபாவினால் எகிறப் போகின்றது என்பது நிச்சயம்.

இவற்றையெல்லாம் இலங்கையின் பொருளாதாரம் சமாளித்து, அவற்றுக்குத் தாக்குப்பிடிக்குமா?

பாவம், இலங்கைத் தீவின் மக்கள். போர் முனைப்பில் பிடிவாதமாக நிற்கும் கொழும்பு அரசியல் தலைமையின் பொறுப்பற்ற போக்கால் ஏற்படப் போகும் பொருளாதார மற்றும் ஏனைய நெருக்கடிகளுக்கு அவர்கள்தான் பலிக்கடாக்களாகப் போகிறார்கள்!

### ஆயுதம் கடத்திய சந்தேகத்தில்

# மாலைதீவில் கைதானவர்களிடம் இலங்கை அதிகாரிகள் விசாரணை

கொழும்பு,மே 21

இலங்கைக்கு ஆயுதம் கடத்த முயன்றார்கள் என்ற சந்தேகத்தில் மாலைதீவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள இலங்கையர்களை அங்கு சென்றுள்ள இலங்கை புலனாய்வு அதிகாரிகள் விசாரணை செய்து வருகின்றனர்.

மாலைதீவுக்கு சென்றுள்ள இலங்கைப் புலனாய்வு அதிகாரிகள் ஐவர், அந்நாட்டு பாதுகாப்பு அதிகாரிகளின் அனுமதி மற்றும் ஒத்துழைப்புடன் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை விசாரிக்கத் தொடங்கியுள்ளனர்.

மாலைதீவு கடல் வழியாக இலங்கைக்கு ஆயுதங்கள் கடத்த முயன்றதாகக் கூறப்படும் படகு ஒன்றை மாலைதீவு கடற்படையினர் கடந்த புதன்கிழமை தாக்கி மூழ்கடித்து அப்படகில் இருந்த நபர்களைக் கைது செய்தமை தெரிந்ததே.

படகிலிருந்ததாகக் கூறப்படும் இந்தியர் ஒருவரும் நான்கு இலங்கையர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். மாலைதீவு அதிகாரிகள் நடத்திய விசாரணைகளின் விவரங்களும் இலங்கை புலனாய்வு அதிகாரிகளுக்கு வழங்கப்படவிருப்பதாக அங்கு இலங்கைத் தூதுவராக உள்ள மொகமது அவி பாருக் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

மாலைதீவு கரையோரக் காவல் படையினரால் மூழ்கடிக்கப்பட்ட கப்பல் 'ஸ்ரீ கிருஷ்ணா' என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்தப் படகு கடந்த 7ஆம் திகதி கன்னியாகுமரியின் கோடிக்கரையிலிருந்து புறப்பட்ட பின்னர் காணாமற் போயிருந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது. இதிலும் மற்றொரு படகிலும் சென்ற 12 தமிழ்நாட்டு மீனவர்களே காணாமற்போனோர் என்று அறிவிக்கப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமையன்று திரும்பி வந்தவர்களாவர்.

(அ-ப)

# நாயன்மார்கட்டில் பெருமெடுப்பில் தேடுதல், சோதனை

யாழ்ப்பாணம், மே 21

நல்லூர் நாயன்மார்கட்டு பகுதியில் நேற்று படையினரால் பெரும் எடுப்பிலான தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதன்போது அப்பிரதேச மக்கள் அனைவரையும் யாழ். கல்வி வலய மைதானத்திற்கு அழைத்து வந்து ஒவ்வொரு வயதுப் பிரிவுனராக பிரித்து விடப்பட்டு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

தொடர்ந்து படைத் தளபதி ஒருவரால் மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்ற வகையிலும் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு உதவக் கூடாது என்றும் புத்திமதி கூறப்பட்டது.

தேடுதலின்போது இளைஞர்கள் துருவித்துருவி விசாரணை செய்யப்பட்டனர்.

எனினும் எவரும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டதாத் தகவல் இல்லை. (அ- 203)

# மதில் இடிந்து வீழ்ந்ததில் சிறுவன் படுகாயம்

யாழ்ப்பாணம்,மே 21

உடைந்த மதிலின் இடிபாடுகளுக்குள் சிக்கி சிறுவன் ஒருவன் படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடிப் பகுதியில் நேற்று காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த சூரியகுமார் கஜலக்ஷன் (வயது 8) என்ற சிறுவனே படுகாயமடைந்தவராவார்.

வெடித்திருந்த மதில் மீது ஏறி விளையாடியபோதே மதில் இடிந்து வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (1-15)

### மனித உரிமை மீறல்கள் ஆணைக்குழுவின்

# சர்வதேசப் பிரமுகர்கள் குழுவின் உறுப்பினர்களில் ஒருவர் அமைச்சரானார்

கொழும்பு,மே 21

மனித உரிமை மீறல்கள் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பணிகளை அவதானிப்பதற்காக அழைக்கப்பட்ட சர்வதேச பிரமுகர்கள் குழுவுக்கு ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதியாக நியமனம் பெற்றிருந்த பேர்னார்ட் கவுச்சனர், பிரான்ஸ் நாட்டின் புதிய வெளியுறவு அமைச்சராகப் பதவிஏற்றுள்ளார்.

கவுச்சனர் ஐரோப்பிய பிரதிநிதியாக நியமிக்கப்படுவதை முதலில் இலங்கைத் தரப்பில் அவர் உகந்தவரல்லவென்று ஆட்சேபிக்க முயற்சி எடுக்கப்பட்டபோதிலும், அனர்த்த நிர்வாக அமைச்சர் மகிந்த சமரசிங்கவின் ஆலோசனையின் பேரில் அவரது நியமனத்தை ஜனாதிபதி அங்கீகரித்திருந்தார். அவ்வாறு செய்தமை அரசுக்கு நல்லதாக அமைந்துவிட்டதென்றே இப்போது கருதப்படுகின்றது.

பிரான்ஸ் நாட்டின் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ள நிக்கலொஸ் சார்கோஸி தனது மந்திரி சபையில் பேர்னார்ட் கவுச்சனரை வெளியுறவு அமைச் சராக நியமித்துள்ளார். எனவே கவுச்சனர் பிரமுகர்கள் குழுவிலிருந்து வில கிக்கொள்வார் என்றும் அதன் பின் நாடு திரும்பி அமைச்சர் பதவியை ஏற்றுக் கொள்வார் என்றும் தெரியவருகின்றது. (ப)

# சமுர்த்தி உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,மே 21

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பும் பொருட்டு சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபை விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இம் மாகாணங்களில் சுமார் ஆயிரத்துக்கும் அதிகமான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அலுவலர்களின் பற்றாக்குறையால் சமுர்த்தித் திட்டங்களை முன்னெடுப்பதில் சிரமங்கள் ஏற்படுகின்றமையைக் கருத்தில் கொண்டு உடனடியாக வெற்றிடங்களை நிரப்ப சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-1-68)

# கடற்படைத் தளபதி ஓய்வு பெறுகின்றார்

கொழும்பு,மே 21

கடற்படையின் தளபதி வியர் அட்மிரல் நந்தன துடவெவத்த இம்மாதம் 21ஆம் திகதியுடன் பணியிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.

கடற்படையின்பல்வேறு நிலைகளில் 36 வருடங்கள் அவர் பணியாற்றியுள்ளார். இக் காலப் பகுதியில் தமது சிறப்பு பணிகளுக்காக அவர் பல பதக்கங்களைப் பெற்றுள்ளார். ரணசூர பதக்கத்தை அவர் இரண்டு முறை வென்றுள்ளார். (ப)

# குடாநாட்டுக்கு ஒன்பது பஸ் வண்டிகள் கப்பலில் எடுத்துவரப்பட்டுக் கையளிப்பு



யாழ்ப்பாணம், மே21

குடாநாட்டிற்கு 'லங்கா முடித்த' கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட 9 பஸ் வண்டிகளும் நேற்றுமுன்தினம் தெல்லிப்பளையில் வைத்து போக்குவரத்துச்சபை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன.

கப்பலில் கொண்டுவரப்பட்ட பஸ்களை இராணுவத்தினர் பொறுப்பேற்று அதிகாரிகளிடம் கையளித்தனர்.

பஸ்களுடன் 100 ரயர் மற்றும் ரியூப்புகளும் குறித்த கப்பலில் எடுத்துவரப்பட்டன என்றும் - பலாலி படைத் தலைமையகத்தின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்பது பஸ்களையும் யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அரச அதிபர் ஊடாக யாழ்.டிப்போ முகாமையாளரிடம் தெல்லிப்பழையில் வைத்துக் கையளித்தார்.

(அ-202)

# ஏழாலை சங்கக் கிளையில் திருட்டு; 14 வயதுச் சிறுவன் விளக்க மறியலில்

யாழ்ப்பாணம்,மே 21

ஏழாலையில் உள்ள ப.நோ.கூ. சங்கக்கடை உடைக்கப்பட்டு பல்லாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. இது தொடர்பாக சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு 14 வயதுச் சிறுவன் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளான்.

சுன்னாகம் ப.நோ.கூ.சங்கத்திற்கு சொந்தமான ஏழாலை மத்தியில் உள்ள கிளையே முன் கதவுகள் உடைக்கப்பட்டு திருட்டு இடம்பெற்றுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஊரடங் குச் சட்டம் நடைமுறையில் இருந்தவேளை இந்த திருட்டு இடம்பெற்றுள்ளது.

பால் விநியோகிக்கும் ஒருவர் வந்ததைக் கண்டதும், திருடிய பொருள்களில் ஒரு பகுதியை கைவிட்டு ஓடித் தப்பினர் திருடர்கள்.

மீன்ரின்கள், பால்மா பைக்கற்றுக்கள் மற்றும் உணவுப் பொருள்களும் திருட்டுப் போயுள்ளதாக அறியப்படுகிறது.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக அதே இடத்தைச் சேர்ந்த 14 வயதுச் சிறுவன் ஒருவன் சுன்னாகம் பொலிஸா ரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன் நேற்று ஆஜர் செய்யப்பட்டார். அவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1-68)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி - 8 | செவ்வாய்க்கிழமை 22.05.2007 |
| திதி: சஷ்டி | மாலை : 06.07 |
| நட்சத்திரம்: | பூசம் பிற்பகல் : 01.38 |
| சுபநேரம் | : 10.22 - 11.52 |
| ராகுகாலம் | : 02.52 - 04.22 |

### சமய சந்நிதிகளில்

நவாலி, மே 21

ஆனைக்கோட்டை சம்மந்தப்பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேக தினமும் மணவாளக் கோலமும் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளன. (1-203-100)

* * *

இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் ஆலய தீர்த்தத் திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறுகிறது. (அ-203)

* * *

கோண்டாவில் மேற்கு சந்திரசேகரப்பிள்ளையார் ஆலய பெருந் திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 28 ஆம் திகதி சப்பரத் திருவிழாவும் 29ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (203)

# தொழில்பயிற்சி ஆரம்ப நிகழ்வு

சங்கானை, மே 21

கனேடிய உலகப் பல்கலைக்கழகச் சேவை நிறுவன அனுசரணையுடன் யாழ். மாவட்ட சர்வோதய நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படும் தொழிற்பயிற்சித் திட்ட ஆரம்ப விழா இன்று முற்பகல் 10.30 மணிக்கு சங்கானை தொழிற்பயிற்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

சர்வோதய அமைப்பின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ஏ.கே.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சங்கானை பிரதேச செயலர் திருமதி ரி.பாபு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

தொலைக்காட்சி, வானொலி திருத்துதல், அலுமினியம் பொருத்துதல் ஆகிய பயிற்சி நெறிகள் இந்த நிலையத்தில் இடம்பெறும். (அ-1-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலையான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் எந்தச் சந்தர்ப்பத்திலும், சூழ் நிலையிலும் தாம் இராணுவ ரீதியாகவோ அரசி யல் ரீதியாகவோ பலவீனமுற்றிருக்கும் போது பேச்சுவார்த்தை மேசைக்குச் செல்லமாட்டார்கள்.

அனைத்துலக நாடுகள் விடுதலைப் புலி கள் மீது நியாயமற்ற தடைகளை விதித்து அந்தந்த நாடுகளில் தமிழர்களின் அரசியற் செயற்பாடுகளை கட்டுப்படுத்தியமை ஸ்ரீ லங்கா அரசு தனக்குச் சாத கமாக பயன் படுத்தி இராணுவத் தீர்வை நோக்கிய தமது கடுமை யான போக்கை முன்னெடுப்பதற்கு காரணமாக அமைந்துள்ளது.

முப்பது வருடங்களுக்கு முன்னரே தமிழர்களால் நிராகரிக்கப்பட்ட தீர்வு முயற் சிகளை தற்போது வெளியிடுவதனால் எவ் வித பயனும் கிடைக்கப்போவ்தில்லை. தமிழரின் உண்மையான அபிலாசை களை சிங்கள தேசம் உண்மையாக உணரும் போதே சரியான தீர்வை அவர்களால் முன் வைக்க முடியும்.

சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்று கூறியவாறு தற்போது முன்னெடுத்துவரும் இராணுவ நடவடிக்கை களை ஏற்றுக்கொள்வதைப் போலான அனைத்துலக நாடுகள் சிலவற்றின் அணுகுமுறை, சிங்கள தேசம் உண்மை யான தீர்வை நோக்கி நகர்வதற்கு ஒரு போதும் உதவமாட்டாது.

கடந்த ஐந்தாண்டு காலப் பகுதியில் சமா தான முயற்சியில் ஈடுபட்டிருந்த போதும் ஸ்ரீலங்கா அரசு தமிழர்களுக்கு நியாயமான தீர்வு எதனையும் முன்வைக்க வில்லை என் பதனை அனைத்துலக சமூகத்தினர் யதார்த்த மாக உணர்ந்திருப்பார்கள்.

ஆனால் சர்வதேச நாடுகள் சிலவற்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் தடைசெய்யப்பட்டு அரசியல் வேலைகளுக்கான கட் டுப் பாடுகளை தமது இராணுவத் தீர்வுக் குக் கிடைத்த அங்கீகாரமாக ஸ்ரீலங்கா அர சாங்கம் கருதுகிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று காணப்பட வேண்டுமானால் முதலில் தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்புப் போர் நிறுத்தப்பட வேண்டும். இலங்கை இராணுவம் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தும் நீதிக்குப் புறம்பான கொலைகள், காணாமற்போகச் செய்தல் ஆகியன உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். தமிழ் மக்களின் போக்குவரத்துக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளும், பொருளாதாரத் தடை களும் நீக்கப்பட வேண்டும் தமிழர் பிரதேசங்களை இராணுவ மய மாக்கலினால் உண்டாக்கப்படும் மனிதப் பேரவலங்களுக்கு முடிவு கட்டப்பட வேண்டும். போர் நிறுத்தப்பட வேண்டும். சமாதான சூழ் நிலை உருவாக்கப்பட வேண்டும். சர்வதேச சமூகத்தின் உதவியு டன், இரு தரப்புகளும் இணைந்து உருவாக்கிய போர் நிறுத்த ஒப்பந் தத்தை முழு அளவில் செயற்படுத்துவதே - நிறைவேற்றுவதே சமா தா னத்தை எய்துவதற்கான மிகப் பொருத்தமான மார்க்கம் என்பதே எனது கருத்தாகும் - என்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசி யற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன். (அ)

## மரண அறிவித்தல்கள்

### மாணிக்கம் நடராசா



புலோலி மேற்கு, திருநாவலூரைப் பிறப்பிடமாகவும் நாவலடி, புலோலி மத்தியில் வசித்தவருமான மாணிக்கம் நடராசா 17.05.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - பாறுபதிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற திருமதி பாக்கியம், திருமதி தங்கம்மா இரத்தினசபாபதி, மாணிக்கம், கந்தசாமி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும் தங்கவேலாயுதம், சுப்ர மணியம் (ஆசிரியர்- விபுலானந்தாக் கல்லூரி, வவுனியா) மகேந்திரம் (நோர்வே), நவரத்தினராசா (நோர்வே), சிவானந்தன் (நோர்வே), சிவமலர், ராணிமலர் (கனடா), ராஜினி (ஜேர்மனி), சாந்தினி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வவிநாயகம் (ஆசிரியர்- ஞானசாரியார் கல்லூரி, கரவெட்டி), சிவகுமார் (கனடா), கேதீஸ் (ஜேர்மனி), கந்தசாமி (மூர்த்தி - நோர்வே), சுமதி, கலையரசி (ஆசிரியர்- விபுலானந்தக் கல்லூரி -வவுனியா), ஜெயகுமாரி (நோர்வே), கலைச்செல்வி (நோர்வே), கோமதி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனும் ஆர்த்திகா, ஐங்கர பாசன், கஜானவைகுந்தன், லம்போதரன், வித்திகா, வினோதினி, தர்ஷினி, சிவாகரன், ஜெயரூபன், மனோகரன், மயூரி, பபிகரன், கஸ்தூரி, சாயீந்திரன், ரஜீபன், ஜெனிசன், துவாகரன், சர்மிகா, மதுரன், பவித்திரன், வயித்தன், ஜீவிதன், றவித்தன், மதுஷியா, ஹரிஸ், நினுஷன், மதுநிஷா, அஞ்சனா, நிதுஷன், கீர்த்திகா, ராகுல் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (20.05.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பருத்தித்துறை சுப்பர்மடம் பொது மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ப.செல்வவிநாயகம்** (மருமகன்).

நாவலடி, புலோலி மத்தி. (சி/52453)

### நோசலின் மார்ஷல்



இராசாவின் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட றோசலின் மார்ஷல் நேற்று (20.05.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சவரிமுத்து - ஆரோக்கியம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான சண்முகம், எலிசபெத் அம்மா, மரியம்மா, திரோசம்மா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற மார்ஷலின் அன்பு மனைவியும் லோறன்ஸ் (பிரான்ஸ்), கிளிபேட் (கனடா), புளோறா (கனடா), நெல்சன் அன்ரனி (லண்டன்), காலஞ்சென்ற ஸ்ரெலா, அருளானந்தம் (கொழும்பு), கில்போலிற்றா (கொழும்பு), ராஜினி ஆகியோரின் அன்புத் தாயும் மகேஸ்வரி, ரஞ்சினி, மரியதாஸ், கனிதிரேசா, மரியதாசன், கொன்சி, எட்வேட், அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.05.2007) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு திரேசம்மா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பின்னர் கொஞ்செஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

71, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்,
தொ.பே. 021 222 5367.

தகவல்:
**அந்தோனிப்பிள்ளை** (மருமகன்).

## வன்னியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளையும் மீட்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது என்பதே இதன் பொருள்.

மதவாச்சி, மன்னார் நெடுஞ்சாலையான ஏ- 14 வீதியின் தென்புறம் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலும், அதன் வடபுறம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலும் உள்ளன. இந்த சாலையின் தலைமன்னார் பகுதி கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

மன்னாருக்கும் வவுனியாவுக்கும் இடையிலான முக்கியமான இடங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 57 ஆவது படையணியின் முதலாவது, 2ஆவது, 3ஆவது பிரிகேட்டுகளை நிறுத்தியுள்ளது.

பல ரெஜிமென்ட்களில் உள்ள படையினரில் இருந்து தரமான படையினரைத் தெரிந்தெடுத்து இந்தப் புதிய 57 ஆவது படை யணி பிரிகேடியர் சுமித் மானவடு தலைமையில் அண்மையில் அமைக்கப்பட்டிருந்தது. இந்தப் படையணியே மன்னாரில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

மேலும் புதிய தளபதியான கேணல் நிர்மல் தர்மரட்ன தலைமையிலான சிறப்புப் படையினரின் முதலாவது ரெஜிமென்டுகளும், கஜபா ரெஜிமென்டின் 8 ஆவது பற்றலியனும், சிங்க ரெஜிமென்டின் 4 ஆவது பற்றலியனும், விஜபா ரெஜிமென்டின் 9 ஆவது பற்றலியனும், 21 ஆவது தேசிய காவல் படையினரும் இந்த நடவடிக்கைகளில் பங்குபற்றி வருகின்றனர்.

### தொப்பிகலவில்

தொப்பிகல காட்டுப் பகுதியில் சிறப்பு கொமாண்டோப் படையினர் நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் அதே சமயம் சிறப்புப் படையினர் மன்னார் காட்டுப்பகுதியிலும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

வன்னிப்பகுதியில் இந்தவாரம் நடைபெற்ற கடும் மோதல்களில் 4 அதிகாரிகளும், 30 படையினரும் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்ட அதிகாரிகளில் சிறப்புப்படை அதிகாரியான கப்டன் நிருசாவும் அடங்குவார். இதில் காயமடைந்த படையினரில் 18இற்கும் மேற்பட்ட படையினர் அநுராதபுரம் மற்றும் கொழும்பு மருத்துவமனைகளுக்கு ஹெலிக்கொப்டர்கள் மூலம் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

எனினும் இந்த மோதல்களில் இறந்த படையினரின் எண்ணிக்கை இராணுவத்தரப்பு கூறுவதைவிட அதிகம் என படைத்துறை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது கனகராயன் குளத்தில் உள்ள தமது பீரங்கிகளை புளியங்குளத்திற்கு நகர்த்திய விடுதலைப்புலிகள் கடுமையான பீரங்கித் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். நகர்த்தக்கூடிய இந்தப் பீரங்கிகள் நெடுங்கேணியில் இருந்து மூன்று முறிப்பு பகுதிக்கு நகர்த்தப்பட்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர் மீண்டும் பழைய நிலைகளுக்கு நகர்த்தப்பட்டுள்ளன.

இராணுவத்தின் இருமுனை நகர்வுத்திட்டமாக விடுதலைப் புலிகளின் முன்னணி நிலைகளை ஓமந்தை ஊடாக முல்லைத் தீவு நோக்கி பின்தள்ளுவதுடன், புளியங்குளம், மாங்குளம் போன்ற பகுதிகளையும் கைப்பற்றுவதாகவே உள்ளது. எனினும் இது கிழக்கில் இடம்பெற்ற நடவடிக்கைகளைப் போல இலகுவானதல்ல.

இன்றுவரை மன்னாரில் நடைபெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகளினால் 1,700 -2,000குடும்பங்கள் மடு, பெரிய பண்டி விரிச்சான், சின்னப்பண்டி விரிச்சான் பகுதிகளில் இருந்து வெளியேறியுள்ளனர். அவர்கள் தற்போது மடுவில் இருந்து வடக்கு நோக்கி 10கி. மீ தொலைவில் உள்ள பெரியமடு பகுதியில் தங்கியுள்ளனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## சு.க.யோசனையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுமென அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரி வித்தார்.

இதேவேளை, அமைச்சர் கரு ஜயசூரிய தலைமையிலான ஐ.தே. கட்சி மாற்றுக் குழுவின் ஆலோசனை வரைவு நாளை செவ்வாய்க்கிழமை அமைச்சர், பேராசிரியர் திஸ்ஸ விதாரணவிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

13ஆவது அரச அமைப்புத் திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபைகள் வரைவை அடிப்படையாகக் கொண்டே ஐக்கிய தேசியக் கட்சி மாற்றுக் குழுவின் தீர்வு ஆலோசனைகள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்வு ஆலோசனைகள் முன் வைக்கப்பட்டதும் ஜாதிக ஹெல உறுமய தனது தீர்வு ஆலோசனைகளை முன்வைக்குமென அக்கட்சியின் நாடாளுமன்ற குழுத்தலைவர் அத்துரலிய ரத்னதேரர் தெரிவித்தார். (சி)

## ஓமந்தைச் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழு அதிகாரிகளுக்கும் இடையில் நேற்று இரண்டு மணி நேரம் பேச்சுக்கள் நடைபெற்றன.

சூனியப் பிரதேசத்தில் தாக்குதல் எதுவும் நடத்தப்படமாட்டாது என்று புலிகள் தரப்பில் உறுதி அளிக்கப்பட்டது.

பொருள்களை ஏற்றி வரும் லொறிகளைச் சோதித்து உடனுக்குடன் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும். பி.ப. 5 மணிக்கு பின்னர் சகல லொறிகளை யும் ஒருசேர அனுதிக்கும் நடைமுறையை மாற்றுமாறு புலிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

மக்களையும், சோதனை செய்த பின்னர் தாமதிக்காமல் உடன் போக்குவரத்துக்கு வசதி செய்யப்பட வேண்டும் என்று கேட்கப்பட்டது.

இதேவேளை -

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் திருப்தி அடைந்தால், ஓமந்தைச் சோனை நிலையத்தை திறப்பதற்குத் தமக்கு ஆட்சேபம் இல்லை எனப் படைத்ரப்புத் தெரிவித்ததாக அறியப்படுகிறது. (அ)

## லெப்.கேணல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த முறியடிப்புத் தாக்குதலில் ஆயுத தளபாடங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (சி)

## ஊனமுற்றோருக்கு வீட்டுத் திட்டம்

யாழ்ப்பாணம், மே 1

சமூக சேவைகள் அமைச்சு ஊனமுற்றவர்களுக்கென வீடமைப்புத் திட்டம் ஒன்ற நடைமுறைப்படுத்த உள்ளது.

மாத வருமானமாக 6 ஆயிரம் ரூபாவுக்குக் குறைவாகப் பெறும் சொந்தக் காணி உடைய அங்கவீனர் இதற்கு விண்ணப்பிக்கத் தகுதி உடையவராவார்.

தகுதியுடையோரை பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலருடன் அல்லது கிராம சேவகருடன் தொடர்பு கொள்ளுமாறு வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் அறிவித்துள்ளார். (203)

## பட்டப் பகலில் பசுமாடு திருட்டு

யாழ்ப்பாணம், மே 21

வீட்டுக்கு அருகாமையில் கட்டி வைக்கப்பட்டிருந்த சுமார் அறுபதாயிரம் ரூபா பெறுமதியான கன்று ஈன்ற பசுமாடு திருடர்களினால் திருடப்பட்டுள்ளது.

கோண்டாவில் மேற்கு சைவப் பாடசாலை ஒழுங்கையில் இந்த துணிகரமான திருட்டு பட்டப்பகல் நேரத்தில் இடம்பெற்றுள்ளது.

இது சம்பந்தமாக பசுமாட்டின் உரிமையாளர் கோப்பாய் பொலிஸ் நிலையத்திலும் கிராம அலுவலரிடமும் முறையிட்டுள்ளார். (1-68)

## பயங்கரவாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாதிகளின் முன்னணி அமைப்புக்கள் சிலவற்றை தமது நாடுகளில் இயங்குவதற்கு அவை அனுமதித்துள்ளன என்றும் அவர் குற்றஞ் சாட்டினார்.

''உலக பயங்கரவாதத்திற்கு எதிராக ஏற்கனவே எங்களால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து வளர்ந்த நாடுகளின் கவனத்தை இங்கு ஈர்க்க விரும்புகின்றேன். அம்மான், இஸ்லாமாபாத், லண்டன் அல்லது கொழும்பு என எங்கு தீவிரவாதத் தாக்குதல்கள் இடம்பெற்றாலும் அவை கட்டாயம் கண்டிக்கப்பட வேண்டியவை.

பயங்கரவாதம் எங்கிருந்தாலும் பயங்கரவாதம் தான்'' என்றார் ஜனாதிபதி.

''துரதிர்ஷ்ட வசமாக சில வளர்ந்த நாடுகள் குறிப்பிட்ட சில பயங்கரவாத அமைப்புக்களை குறைந்த ஆபத்தானவையாகக் கருதுகின்றன.

இத்தகைய அமைப்புக்கள் கிளர்ச்சிவாதிகளாகவோ சுதந்திரத்திற்காகச் சண்டையிடு பவர்களாகவோ நோக்கப்படுகின்றனர். ஏனெனில் அவர்கள் குறித்த நாடுகளில் எந்த வன்முறைச் செயற்பாடுகளிலும் ஈடுபடுவதில்லை என்பதனால்.

சில நாடுகள் ஜனநாயகத்தின் பேரால் பயங்கர வாத அமைப்புக்கள் தமது முன்னணி அலுவலகங்களை இயக்குவதற்கும் அமைப்புக் களை நடத்துவதற்கும் தொண்டு அடிப்படை யிலான செயற்பாடுகளுக்கும் தத்தம் நாடுகளில் அனுமதி அளித்துள்ளன. இதன் மூலம் அவர்கள் பயங்கரவாதத்தில் வேறுபாடுகளைக் காட்டுகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.''

- என மேலும் கூறினார் ஜனாதிபதி. (சி)


## இலிகிதர் (Clerk) தேவை

இல. 18, வைமன் வீதி, நல்லூரில் இயங்கும் எடிசன் கல்வி நிலையத்திற்கு இலிகிதர் (Clerk) ஒருவர் தேவை.
கல்வித் தகைமை: A/L சித்தி
பெண் இலிகிதர் விரும்பத்தக்கது.
தகுதிக்கேற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு முகவரி:**
**எடிசன் அக்கடமி (தலைமை நிலையம்)**
(யாழ். இந்து ஆரம்ப பாடசாலை எதிரில்) 539A கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு நேரம்: தினமும் 8 a.m. - 5 p.m.


## வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர்
**வல்லிபுரம் சிவபாக்கியநாதன்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 23-05-2007 புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அன்றைய தினம் தங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வைத்தியசாலை அருகில்,
கோப்பாய்.

**குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.05.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org